பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 8

முன்னுரை 15

1 இறைத்தூதர்களின் அழைப்பும் சமூகங்களுடன் அவர்களின் அணுகுமுறையும் 19

1 தூதர்கள் அனைவரும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைப்பதிலிருந்தே தம் பணியைத் தொடங்கினார்கள் 21

2 அல்லாஹ்வே படைத்துப் பராமரிப்பவன் என்பதை ஏற்றுக்கொள்வது அவனே வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதையும் ஏற்றுக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்துகிறது 24

3 தூதர்கள் மனிதர்களாக இருப்பதால் கிடைக்கும் பலன்கள் 28

4 தூதர்கள் நிராகரிக்கப்படுதல் 31

5 தூதர்களின் நம்பகத்தன்மைக்கும் அவர்களுடைய அழைப்பின் உண்மைத் தன்மைக்கும் ஆதாரங்கள் 35

6 நிராகரித்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு வகையான தண்டனைகள் 43

7 பின்பற்றக்கூடியவர்கள் அதிகமாக இருப்பது அழைப்பின் உண்மைத்தன்மைக்கோ, குறைவாக இருப்பது அழைப்பு குறைபாடுடையது என்பதற்கோ ஆதாரம் அல்ல 45

8 தலைவர்களும் செல்வந்தர்களும்தாம் தூதர்களின் அழைப்பை நிராகரிப்பவர்களில் முதலாமவர்களாக இருப்பார்கள் 47

9 தூதர்களின் அழைப்பை நிராகரிப்பதற்கு அசத்தியவாதிகளின் வழிமுறைகள் 49

10 இணைவைப்பாளர்கள் தூதர்கள்மீது எழுப்பிய ஆட்சேபணைகளும் அவற்றிற்கான பதில்களும் 56

11 இறைத்தூதர்கள் வரலாற்றில் சில சந்தேகங்களும் அவற்றுக்கான மறுப்புகளும் 74

2 **இறைத்தூதர்களின் சம்பவங்களிலிருந்து கிடைக்கும் பாடங்களும் நுட்பங்களும் 83**

1 உளத்தூய்மையும் அல்லாஹ்வின்பால் அடைக்கலம் தேடுவதும் நேர்வழி பெறுதல் மற்றும் வெற்றிக்குக் காரணமாக இருக்கின்றன 85

2 யார் அல்லாஹ்வுக்காக ஒரு விசயத்தை விட்டுவிடுகிறாரோ அல்லாஹ் அவருக்கு அதைவிடச் சிறந்த ஒன்றை அளிப்பான் 87

3 அசத்தியத்தை அடியோடு அழித்தல் 89

4 தூதுத்துவத்தைப் பெற்றிருந்தபோதிலும் தூதர்கள் சோதனையைவிட்டுத் தப்பவில்லை 91

5 ஈமானிய ஒளி உள்ளத்தோடு ஒன்றிவிட்டால் மிகப் பெரிய ஒவ்வொன்றும் இலகுவாகிவிடும் 93

6 மூஸாவுக்கும் ஃபிர்அவ்னுக்கும் இடையே நடந்த உரையாடல் 96

7 மானக்கேடான மற்றும் தீய காரியங்களில் தொடர்ந்து நிலைத்திருப்பது சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறியும் தன்மையை இல்லாமலாக்கிவிடும் 99

8 அழைக்கப்படும் மக்களுடன் அழைப்பாளன் நடந்துகொள்ளும் முறை 102

9 அல்லாஹ் தன் தூதர்களுக்கும் நல்லடியார்களுக்கும் உதவக்கூடியவன் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதிமீது நம்பிக்கை கொள்ளுதல் 108

10 மறுப்பு அது சிறிய அளவில் இருந்தாலும் நிச்சயம் அது உள்ளங்களில் பாதிப்பு ஏற்படுத்தியே தீரும் 110

11 கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளுதல் 111

12 வலிமையும் வாய்மையும் 114

13 'நான் நம்பிக்கைக்கு உரியவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றேன்' 115

14 'உமக்குத் தூதுத்துவம் வழங்குவது மூலமாகவும் உம்முடன் உரையாடுவதன் மூலமாகவும் நான் மக்கள் அனைவரையும்விட உம்மைத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன்' என்ற வசனத்திலிருந்து கிடைக்கும் பாடங்கள் 117

15 கனவு மார்க்க அறிவுகளில் ஒன்றாகும். அறிவின்றி அதற்கு விளக்கம் அளிக்கக் கூடாது 119

16 மார்க்கம் கூறும் வழிமுறையைக் கொண்டே மனிதன் அவதூறிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் 121

17 நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் நிதானத்தையும் பொறுமையையும் கடைப்பிடித்தல் 124

18 பிரார்த்தனைக்கு ஆமீன் சொல்லக்கூடியவரும் பிரார்த்திப்பவருடன் பிரார்த்தனையில் பங்கேற்கிறார் 126

19 பிரார்த்திப்பவர் தன் சூழ்நிலைக்கேற்ப பிரார்த்தனையை முடித்தல் 128

20 மகிழ்ச்சியில் அல்லாஹ்வை அறிந்துகொள்ளுங்கள்; துன்பத்தில் உங்களை அவன் அறிந்துகொள்வான் 130

21 அல்லாஹ்வை அஞ்சி பொறுமையைக் கடைப்பிடித்தவர்களுக்கே நல்ல முடிவு கிடைக்கும் 132

22 பொறாமை ஏற்பட்டுவிடுமோ, விரும்பத்தகாத விசயத்தின் பக்கம் இட்டுச்சென்றுவிடுமோ என்ற அச்சத்தால் சில அருட்கொடைகளை மறைத்துக்கொள்ளலாம் 133

23 மூஸாவுக்கும் ஃபிர்அவ்னுக்கும் இடையே நடந்த சம்பவம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டதன் நோக்கம் 135

3

தூதர்கள் மனிதர்களாக இருப்பதால் கிடைக்கும் பலன்கள்

✿

முந்தைய சமூகத்தினரும் மக்காவின் நிராகரிப்பாளர்களும் தூதர்கள் கொண்டு வந்ததை நிராகரித்தார்கள். தங்களின் நிராகரிப்பிற்குத் தங்களின்பால் அனுப்பப்பட்ட தூதர்கள் மனிதர்களாக இருப்பதே காரணம் என்றும் கூறினார்கள். நூஹின் சமூகத்தினர் கூறினார்கள்,

مَا هَذَا إِلَّا بَشَرٌ مِثْلُكُمْ يُرِيدُ أَنْ يَتَفَضَّلَ عَلَيْكُمْ وَلَوْ شَاءَ اللَّهُ لَأَنْزَلَ مَلَائِكَةً مَا سَمِعْنَا بِهَذَا فِي ءَابَائِنَا الْأَوَّلِينَ

‘தன்னைத் தூதர் என்று கூறும் இவர் உங்களைப் போன்ற மனிதர்தாம். உங்கள்மீது ஆட்சி செலுத்த விரும்புகின்றார். அல்லாஹ் நம்மிடம் ஒரு தூதரை அனுப்ப நாடியிருந்தால் வான வர்களிலிருந்து தூதரை அனுப்பியிருப்பான். ஒரு மனிதரைத் தூத ராக அனுப்பமாட்டான். நம்முடைய முன்னோர்களிடம் இதைப் போன்று நாங்கள் கேள்விப்பட்டதில்லை.’ (குர்ஆன் 23:24)

மூஸாவின் சமூகத்தினர் கூறினார்கள்,

أَنُؤْمِنُ لِبَشَرَيْنِ مِثْلِنَا وَقَوْمُهُمَا لَنَا عَابِدُونَ

‘நாங்கள் எங்களைப் போன்ற இரண்டு மனிதர்களை - மூஸாவை யும் ஹாரூனையும் ஏற்றுக்கொள்வதா? எங்களைவிட அவர்கள் இருவரும் எந்தச் சிறப்பையும் பெற்றிருக்கவில்லை. அவர்களின் சமூகத்தினரோ நமக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.’ (குர்ஆன் 23:47)

இது போன்ற வசனங்கள் குர்ஆனில் ஏராளமாகக் காணப்படுகின் றன. அல்லாஹ் அவர்களின் இந்தக் கூற்றை மறுத்துரைக்கிறான். தூதர்கள் மனிதர்களாக இருப்பது மனிதர்கள்மீது தான் புரிந்த அருட்கொடை என்பதைத் தெளிவுபடுத்துகிறான்,

5

தூதர்களின் நம்பகத்தன்மைக்கும் அவர்களுடைய அழைப்பின் உண்மைத் தன்மைக்கும் ஆதாரங்கள்

✿

5.1 இறைத்தூதர்களின் அற்புதங்கள்

அல்லாஹ் தன் தூதர்களை, அவர்கள் தன் புறத்திலிருந்து அனுப்பப் பட்ட உண்மையான தூதர்கள்தாம் என்பதற்குச் சான்றாக அற்புதங் களைக் கொண்டு அவர்களை வலுப்படுத்தினான். அது போன்ற அற்புதங்களை எந்த மனிதனாலும் ஜின்னாலும் கொண்டுவர முடியாது. இது அல்லாஹ் தன் அடியார்கள்மீது பொழிந்த அரு ளாகும். மனித மனங்கள் நிராகரிக்கத்தான் செய்யும் என்பதை அவன் அறிவான். தூதர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் இந்த நிராகரிப்பை முறியடித்து அவர்களை அடிபணிய வைத்து விடும். அல்லாஹ் மக்களுக்குச் சவால்விடுவதற்காக அவர்கள் அறிந்தவற்றிலிருந்தே தூதர்களுக்கு அற்புதங்களை வழங்கினான்.

ஸாலிஹ் ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம்:

وَيَا قَوْمِ هَٰذِهِ نَاقَةُ اللَّهِ لَكُمْ ءَايَةً فَذَرُوهَا تَأْكُلْ فِي أَرْضِ اللَّهِ وَلَا تَمَسُّوهَا بِسُوءٍ فَيَأْخُذَكُمْ عَذَابٌ قَرِيبٌ

‘என் சமூகமே! இது என்னுடைய நம்பகத்தன்மைக்கு சான்றாகவும் உங்களுக்கு அத்தாட்சியாகவும் அமைந்த அல்லாஹ்வின் பெண் ஒட்டகமாகும். அல்லாஹ்வின் பூமியில் அதனை மேய விட்டு விடுங்கள். அதற்கு எந்தத் தீங்கும் இழைத்துவிடாதீர்கள். அவ்வாறு செய்தால் நெருங்கிய வேதனை உங்களைத் தாக்கிவிடும்.’ *(குர்ஆன் 11:64)*

மூஸா ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம்:

6

நிராகரித்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு வகையான தண்டனைகள்

✿

நிராகரித்த சமூகங்கள் தம் பாவங்களின் காரணமாக அழிக்கப்பட்டன என்று அல்லாஹ் அறிவிக்கிறான். அவர்கள் தூதர்கள் கொண்டுவந்த ஒளியைப் பின்பற்றாமல் அவர்களின் கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டார்கள். ஒவ்வொரு சமூகத்தையும் அவன் தண்டித்தான்.

فَكُلًّا أَخَذْنَا بِذَنْبِهِ فَمِنْهُمْ مَنْ أَرْسَلْنَا عَلَيْهِ حَاصِبًا وَمِنْهُمْ مَنْ أَخَذَتْهُ الصَّيْحَةُ وَمِنْهُمْ مَنْ خَسَفْنَا بِهِ الْأَرْضَ وَمِنْهُمْ مَنْ أَغْرَقْنَا وَمَا كَانَ اللَّهُ لِيَظْلِمَهُمْ وَلَكِنْ كَانُوا أَنْفُسَهُمْ يَظْلِمُونَ

‘மேற்கூறப்பட்ட ஒவ்வொருவரையும் நம் வேதனையால் நாம் தண்டித்தோம். அவர்களில் லூத்துடைய சமூகத்தின்மீது சுடப் பட்ட கல்மழையைப் பொழியச் செய்தோம். அவர்களில் ஸாலிஹ் மற்றும் ஷு ஐபின் சமூகங்களைப் பேரிடி தாக்கியது. அவர்களில் சிலரை – காரூனை – பூமியில் புதையச் செய்தோம். அவர்களில் நூஹின் சமூகம், ஃபிர்அவ்ன், ஹாமான் ஆகியவர்களை மூழ் கடித்து அழித்தோம். அவர்கள் செய்யாத பாவத்திற்காக அவர் களைத் தண்டித்து அல்லாஹ் அவர்கள்மீது அநீதி இழைக்க வில்லை. மாறாக, அவர்கள் பாவங்கள் புரிந்து தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டார்கள்; தண்டனைக்கு உரியவர்களாக ஆனார்கள்.’ (குர்ஆன் 29:40)

நிராகரித்த ஒவ்வொரு சமூகத்தினரும் உரிய தண்டனையைப் பெற்றார்கள். மறுமையின் வேதனையோ மிகக் கடுமையானது. இவ்வாறு சமூகங்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு வகையான தண்டனைகளை அறிவதின் மூலமாக நல்லுணர்ச்சிமிக்க முஸ்லிம் களுக்குச் சில படிப்பினைகள் இருக்கின்றன. அவை:

1. அல்லாஹ்வின் வல்லமையை அறிதல். அவனுடைய வல்ல மைக்கு எந்த எல்லையும் இல்லை.

8

தலைவர்களும் செல்வந்தர்களும்தாம் தூதர்களின் அழைப்பை நிராகரிப்பவர்களில் முதலாமவர்களாக இருப்பார்கள்

✿

குர்ஆனில் தூதர்களின் வரலாற்றை ஆராயும்போது தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர்தாம் தூதர்களின் அழைப்பை நிராகரிப்பவர்களில் முன்னணியில் இருந்துள்ளார்கள். ஏனெனில், தூதர்கள் ஓரிறைக் கொள்கை, நீதி மற்றும் பூமியில் அல்லாஹ்வின் சட்டங்களை நிலைநாட்டுதலைக் கொண்டு வருகிறார்கள். இவற்றைத்தான் தலைவர்கள் வெறுக்கிறார்கள். அவற்றைப் பின்பற்றினால் தங்களின் மதிப்பும் அந்தஸ்தும் குறைந்துவிடும் என்றும் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களை மிகைத்துவிடுவார்கள் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் நம்பிக்கைகொண்டு தூதர்களை உண்மைப்படுத்தி, நற்செயல்கள் புரிந்து, பூமியில் அல்லாஹ்வின் சட்டங்களை நிலைநாட்டி, தேவைக்கதிகமான தங்களின் செல்வங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்திருந்தால் மறுமைக்கு முன்னால் இவ்வுலகிலும் சிறந்த அந்தஸ்தைப் பெற்றிருப்பார்கள்.

நூஹின் சமூகத்திலுள்ள தலைவர்கள் அவரிடம் கூறினார்கள்:

فَقَالَ الْمَلَأُ الَّذِينَ كَفَرُوا مِنْ قَوْمِهِ مَا نَرَاكَ إِلَّا بَشَرًا مِثْلَنَا وَمَا نَرَاكَ اتَّبَعَكَ إِلَّا الَّذِينَ هُمْ أَرَاذِلُنَا بَادِيَ الرَّأْيِ وَمَا نَرَى لَكُمْ عَلَيْنَا مِنْ فَضْلٍ بَلْ نَظُنُّكُمْ كَاذِبِينَ

‘நாங்கள் உமது அழைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்கள்மீது உமக்கு எந்தச் சிறப்பும் இல்லை. நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதர்தாம். எங்களில் அறிவற்ற இழிவானவர்களே உம்மைக் குறித்து எதையும் ஆராயாமல் உம்மைப் பின்பற்றுவதைக் காண்கிறோம். நாங்கள் உம்மைப் பின்பற்றுவதற்கு பணத்திலோ பதவியிலோ கண்ணியத்திலோ என

9

தூதர்களின் அழைப்பை நிராகரிப்பதற்கு அசத்தியவாதிகளின் வழிமுறைகள்

✿

ஒவ்வொரு காலகட்டத்திலும் இஸ்லாமியச் சமயத்தின் எதிரிகள் தூதர்களின் அழைப்பை நிராகரிப்பதற்கு தங்களால் இயன்ற அத்தனை வழிகளையும் பின்பற்றுகிறார்கள். இதன் மூலம் தாங்கள் தாம் சத்தியத்தில் இருக்கின்றோம் என்று கூறிக்கொண்டு சத்தியத்தை யும் சத்தியவாதிகளையும் தவறாகச் சித்தரிக்க முயல்கிறார்கள். அவற்றுள் சில:

9.1 தூதர்களுடன் பேரம்பேசி அவர்களைச் சத்தியத்தைவிட்டும் திருப்ப முயற்சி செய்தல்

வழிகேடர்கள் தூதர்களுடன் பேரம்பேசி அவர்களின் அழைப்புப் பணியிலிருந்து அவர்களைத் திசைதிருப்ப முயல்கிறார்கள். பின் வரும் வசனம் முஹம்மது ﷺ அவர்களை இணைவைப்பாளர்கள் எவ்வாறு திசைதிருப்ப முயன்றார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது:

وَإِنْ كَادُوا لَيَفْتِنُونَكَ عَنِ الَّذِي أَوْحَيْنَا إِلَيْكَ لِتَفْتَرِيَ عَلَيْنَا غَيْرَهُ وَإِذًا لَاتَّخَذُوكَ خَلِيلًا

‘தூதரே! நீர் இணைவைப்பாளர்களின் மன இச்சைக்கேற்ப நம் மீது புனைந்து கூற வேண்டும் என்பதற்காக, நாம் உமக்கு வஹ்யி மூலம் அறிவித்த குர்ஆனைவிட்டும் உம்மைத் திசை திருப்ப முயன் றார்கள். அவர்கள் விரும்பியதை நீர் செய்திருந்தால் உம்மைப் பிரியத்திற்குரியவராக ஆக்கியிருப்பார்கள்.’ (குர்ஆன் 17:73)

குறைஷிகள் தங்களிடமுள்ள அசத்தியத்தில் சில விசயங்களை முஹம்மது ﷺ ஏற்றுக்கொண்டால் தாங்கள் அவரைப் பின்பற்று வதாகக் கூறினார்கள். ஆயினும், அல்லாஹ் தன்னுடைய தூதரை உறுதிப்படுத்தினான்.

5

ஈமானிய ஒளி உள்ளத்தோடு ஒன்றிவிட்டால் மிகப் பெரிய ஓவ்வொன்றும் இலகுவாகிவிடும்

✿

ஃபிர்அவ்னுடைய சமூகத்தைச் சேர்ந்த சூனியக்காரர்கள் மிகப் பெரும் சூனியத்தைக் கொண்டு வந்தார்கள்.

قَالَ أَلْقُوا فَلَمَّا أَلْقَوْا سَحَرُوا أَعْيُنَ النَّاسِ وَاسْتَرْهَبُوهُمْ وَجَاءُوا بِسِحْرٍ عَظِيمٍ

‘மூஸா அவர்களைப் பொருட்படுத்தாதவராக, தம் இறைவன் தமக்கு உதவிபுரிவான் என்ற உறுதியான நம்பிக்கை உடைய வராக அவர்களிடம் கூறினார்: ‘உங்களின் கயிறுகளையும் கைத்தடிகளையும் எறியுங்கள்.’ அவர்கள் போட்டபோது மக்க ளின் கண்களை உண்மை நிலையிலிருந்து திருப்பி மயக்கினார்கள். அவர்களைப் பயமுறுத்தினார்கள். பார்ப்பவர்களின் கண்களுக்கு வலிமையான சூனியத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள்.’ *(குர்ஆன் 7:116)*

அல்லாஹ்வுடைய கட்டளையின்படி மூஸா ﷺ தம் கைத்தடியைப் போட்டபோது அது சூனியக்காரர்களின் வித்தைகள் அனைத்தை யும் முறியடித்துவிட்டது. மூஸா ﷺ கொண்டு வந்தது சூனியம் அல்ல. அது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள சான்று என்பதைச் சூனியக்காரர்கள் உறுதியாக அறிந்துகொண்டார்கள். சான்றுகளைக் கண்ட அவர்கள் எவ்விதத் தயக்கமும் ஆலோசனையும் இன்றி உடனே நம்பிக்கைகொண்டார்கள்.

ஃபிர்அவ்ன் அவர்கள்மீது கோபம்கொண்டான். அவர்களின் மாறுகைகள், மாறுகால்களை வெட்டிப் பேரீச்ச மரத்தில் கழுவி லேற்றிவிடுவேன் என்றெல்லாம் மிரட்டிப் பார்த்தான். ஆயினும், அவர்கள் அவனுடைய பேச்சுக்குக் கட்டுப்படவில்லை.

قَالُوا إِنَّا إِلَى رَبِّنَا مُنْقَلِبُونَ وَمَا تَنْقِمُ مِنَّا إِلَّا أَنْ ءَامَنَّا بِآيَاتِ رَبِّنَا لَمَّا جَاءَتْنَا رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَتَوَفَّنَا مُسْلِمِينَ

16

மார்க்கம் கூறும் வழிமுறையைக் கொண்டே மனிதன் அவதூறிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்

✿

ஒரு மனிதன் சில சந்தர்ப்பங்களில் மற்றவர்களின் சந்தேகப் பார்வைக்கு உட்படலாம். அவனைக் குறித்து கேள்விப்பட்ட ஒன்றை மக்கள் பரப்பியிருக்கலாம். எப்படியிருப்பினும் மனிதன் தன்னால் இயன்ற அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தி அவதூறை எதிர்கொள்ள வேண்டும். யூசுஃப் நபியின் சம்பவத்திலிருந்து இதற்கான எடுத்துக்காட்டு தெளிவாகிறது. அவர் சிறையிலடைக்கப்பட்டார். அநியாயமாகப் பல வருடங்கள் வரை சிறையில் தங்கியிருந்தார். அரசன் கண்ட கனவின் விளக்கத்தை அவர் கூறியபோது அரசன் அவரைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு கூறினான். ஆனால், அவரோ தம்மீது சுமத்தப்பட்ட அவதூறு நீங்கி தான் குற்றமற்றவர் என்பது தெளிவாகும் வரை சிறையிலிருந்து வெளியேறமாட்டேன் என்று கூறிவிட்டார். அல்லாஹ் கூறுகிறான்:

وَقَالَ الْمَلِكُ ائْتُونِي بِهِ فَلَمَّا جَاءَهُ الرَّسُولُ قَالَ ارْجِعْ إِلَىٰ رَبِّكَ فَاسْأَلْهُ مَا بَالُ النِّسْوَةِ اللَّاتِي قَطَّعْنَ أَيْدِيَهُنَّ إِنَّ رَبِّي بِكَيْدِهِنَّ عَلِيمٌ قَالَ مَا خَطْبُكُنَّ إِذْ رَاوَدْتُنَّ يُوسُفَ عَنْ نَفْسِهِ قُلْنَ حَاشَ لِلَّهِ مَا عَلِمْنَا عَلَيْهِ مِنْ سُوءٍ قَالَتِ امْرَأَةُ الْعَزِيزِ الْآنَ حَصْحَصَ الْحَقُّ أَنَا رَاوَدْتُهُ عَنْ نَفْسِهِ وَإِنَّهُ لَمِنَ الصَّادِقِينَ

‘யூசுஃபின் விளக்கம் அரசரை அடைந்தபோது அவர் தம் உதவியாளர்களிடம் கூறினார்: ‘அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்து என்னிடம் அழைத்து வாருங்கள். அரசரின் தூதர் யூசுஃபிடம் வந்தபோது யூசுஃப் அவரிடம் கூறினார்: ‘உம் எஜமானனிடம் திரும்பிச் சென்று தங்கள் கைகளை அறுத்துக் கொண்ட அந்தப் பெண்களைக் குறித்துக் கேட்பீராக. (விடுதலை

23

மூஸாவுக்கும் ஃபிர்அவ்னுக்கும் இடையே நடந்த சம்பவம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டதன் நோக்கம்

✿

இப்னு தைமிய்யா ﵀ கூறுகிறார்: அச்சம்பவம் மீண்டும் மீண்டும் குர்ஆனில் கூறப்பட்டதன் நோக்கம் இருவரும் சத்தியம் மற்றும் அசத்தியத்தின் உச்சக்கட்ட எல்லையில் இருந்தார்கள். ஃபிர்அவ்ன் தன்னைத்தானே இறைவன் எனப் பிரகடனப்படுத்திக்கொண்டு நிராகரிப்பின் உச்சக்கட்டத்தில் இருந்தான். மறுபுறம் மூஸா ﵇ சத்தியத்தின் உச்சக்கட்டத்தில் இருந்தார். அல்லாஹ் அவருடன் நேரிடையாகப் பேசியிருக்கின்றான். அவருக்குத் தூதுத்துவத்தை வழங்கினான். ஒருவர் நிராகரிப்பின் உச்சக்கட்டத்தில், இன்னொருவர் பெரும் சிறப்புகளைப் பெற்று சத்தியத்தின் உச்சக்கட்டத்தில். மற்ற தூதர்களின் மக்கள் அல்லாஹ்வின் இருப்பை மறுக்கவில்லை. அந்தத் தூதர்களுடன் அல்லாஹ் நேரிடையாகப் பேசவுமில்லை. ஆனால், ஃபிர்அவ்னோ தன்னையே கடவுள் என்று கூறி அல்லாஹ் வின் இருப்பையே மறுத்தான். மூஸாவுடன் அல்லாஹ் நேரிடை யாகப் பேசியிருக்கின்றான். மூஸா மற்றும் ஃபிர்அவ்னின் சம்பவம் நம்பிக்கையாளர்கள் மற்றும் நிராகரிப்பாளர்களுக்கு மிகப் பெரும் படிப்பினைகளை உள்ளடக்கிய சம்பவமாகும். எனவேதான் நபியவர்கள் இஸ்ராயீலின் மக்களைக் குறித்து தம் சமூகத்தவரிடம் அதிகம் கூறக்கூடியவர்களாக, பெரும்பாலான விசயங்களில் மூஸாவைக் கொண்டு ஆறுதல் பெறக்கூடியவர்களாக இருந்தார்கள். பத்ருப் போரில் அபூ ஜஹல் கொல்லப்பட்டுவிட்டான் என்ற நற் செய்தி நபியவர்களிடம் கூறப்பட்டபோது இந்த சமூகத்தின் ஃபிர்அவ்ன் இறந்துவிட்டான் என்று கூறினார்கள். அவன் அல்லாஹ் வைவிடுத்து வேறு இறைவனை வணங்கிக்கொண்டிருந்தான். ஃபிர்அவ்ன் மூஸா ﵇ கொண்டுவந்தது சத்தியம் என்பதைத்